## வக்ஃப் வாரிய திருத்த சட்ட முன்வடிவை திரும்பப்பெற வலியுறுத்திய தீர்மானத்தை

# வரவேற்ற கட்சித் தலைவர்கள் - உறுப்பினர்களுக்கு நன்றி!

## சட்டப் பேரவையில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 28-

**சட்டப்பேரவையில் வக்ஃப் வாரிய திருத்த சட்ட திருத்த மசோதாவை ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்தி முதல்வர் அவர்களால் கொண்டு வரப்பட்ட தனித்தீர்மானத்தை அ.தி.மு.க. உள்பட பேரவையில் உள்ள அனைத்துக் கட்சிகளும் (பா.ஜ.க. நீங்கலாக) வரவேற்றன. இத் தீர்மானத்தை வரவேற்ற கட்சித் தலைவர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நன்றி தெரிவித்துக் கொண்டார்.**

சட்டப் பேரவையில் நேற்று கேள்வி நேரம் முடிவுற்றதும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வக்பு சட்டத்திருத்த முடிவுகளை முழுமையாக திரும்பப் பெற வேண்டும் என்று ஒன்றிய அரசை வலியுறுத்தி தனிநபர் தீர்மானம் கொண்டு வந்தார்.

இத்தீர்மானத்தை ஆதரித்து ஜெகன்மூர்த்தி, வேல்முருகன், ஈஸ்வரன், ஜவாஹிருல்லா, சதன் திருமலைக்குமார், டி.இராமச்சந்திரன், நாகை மாலி, சிந்தனைச்செல்வன், ஷாநவாஸ், ஜி.கே.மணி, அசன் மௌலானா, எஸ்.பி. வேலுமணி ஆகியோர் வரவேற்றுப் பேசினர்.

நிறைவாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:-

இந்த வக்ஃப் வாரிய திருத்த சட்டமுன்வடிவை திரும்பப்பெற வலியுறுத்தி ஒரு தீர்மானத்தை கொண்டுவந்து இங்கே அனைத்துக் கட்சிகளின் சார்பாக அந்தந்த கட்சியினுடைய தலைவர்கள், உறுப்பினர்கள், பிஜேபியைத் தவிர, அவர்கள் வெளிநடப்பு செய்திருக்கிறார்கள். இங்கே பிரதான எதிர்க்கட்சியும் மனதார வரவேற்று இருக்கிறார்கள். அதற்காக நான் முதலில் எல்லோருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேநேரத்தில் பிரதான எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய அ.தி.மு.க. விடம் நான் வைக்கக்கூடிய ஒரு கோரிக்கை, நேற்று முன்தினம் இதே அவையிலே இருமொழிக் கொள்கை பிரச்சினை பற்றி பேசுகிறபோது ஒன்று சொன்னேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் டெல்லிக்குச் சென்றிருக்கிறார்கள். எனக்கு செய்தி கிடைத்திருக்கிறது. யாரை சந்திக்க போகிறார் என்கிற அந்த செய்தியும் கிடைத்திருக்கிறது என்று சொன்னேன். ஆக, டெல்லியில் இறங்கிய பிறகு, அவர் செய்தியாளர்களிடம் பேசுகிறபோது நான் இங்கே அவையிலே பேசியதை அங்கே நிருபர்கள் கேட்டிருக்கிறார்கள். நான் யாரையும் சந்திக்க வரவில்லை. எந்த அரசியல் நிலையிலும் வரவில்லை. எங்களுடைய கட்சி அலுவலகத்தை பார்வையிடுவதற்காக வந்திருக்கிறேன் என்று சொல்லிவிட்டு சென்றார். அதற்குப் பிறகு மாலையிலே பார்த்தால் ஒரு காரிலே ஏறி புறப்பட்டு இருக்கிறார்; உள் துறை அமைச்சரை சென்று சந்தித்திருக்கிறார். சந்திக்கலாம், நாங்கள் அதை வேண்டாமென்றோ, தவறு என்றோ சொல்லவில்லை.

ஆனால், அதே நேரத்தில், அங்கே சென்று தமிழ்நாட்டிற்கு வேண்டிய உரிமையை நான் கேட்டிருக்கிறேன், இருமொழிக் கொள்கை பற்றி நான் பேசியிருக்கிறேனென்று தில்லியிலிருந்து செய்தியாளர்களிடம் தெரிவித்திருக்கிறார். அதற்காக, நான் உள்ளபடியே இந்த அவையின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நன்றி தெரிவிக்கும் நேரத்தில், எவ்வாறு இருமொழிக் கொள்கை குறித்து வலியுறுத்தி வந்திருப்பதாகத் தெரிவித்தாரோ, அதேபோல் வக்ஃபு சட்டத் திருத்தப் பிரச்சினையையும் அடுத்த முறை டெல்லி செல்லும்போது அவர் வலியுறுத்த வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து, என் உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் உரையாற்றினார்.

---

## பொதுப்பணித்துறை சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள

# கட்டுமானப் பணிகளுக்கான தரவு விவரப் புத்தகங்கள்!

## முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டார்!

*சென்னை, மார்ச் 28-*

*முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.3.2025) தலைமைச் செயலகத்தில், பொதுப்பணித் துறை சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள 8 தொகுதிகள் கொண்ட கட்டுமானப் பணிகளுக்கான தரவு விவரப் புத்தகங்களை வெளியிட்டார்.*

*தமிழ்நாட்டில் கட்டுமானம் மற்றும் பொறியியல் பணிகள் பல்வேறு துறைகள் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு துறையிலும் அத்துறைக்கு ஏற்ப பணிகளை மேற்கொள்ள ஏதுவாக துறைவாரியாக தரவு விவரப் புத்தகங்கள் தனித்தனியாக பயன்பாட்டில் உள்ளது.*

*1984ஆம் ஆண்டு பொதுப்பணித் துறைக்கென கட்டுமானப் பணிக்களுக்கான தரவு விவரப் புத்தகம் திருத்தியமைக்கப்பட்டு, இன்று வரை பயன்பாட்டில் இருந்து வருகிறது. எனவே, இதை உணர்ந்து தற்போது தமிழ்நாடு அரசு அனைத்து பொறியியல் துறைகளும் உபயோகிக்கும் வண்ணம் ஒருங்கிணைந்த கட்டுமானப் பணிக்களுக்கான தரவு விவரப் புத்தகம் தயாரிக்க, பொதுப்பணித் துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), தலைமையில் அனைத்து பொறியியல் துறைகளின் தலைமைப் பொறியாளர்கள் உறுப்பினர்களாகவும் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது.*

*காலப்போக்கில் பல்வேறு தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக கட்டுமானங்கள், நவீன தொழில்நுட்ப இயந்திரங்கள் மற்றும் நவீன கட்டுமான முறைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த மாற்றங்களை கட்டுமானப் பணிகளுக்கான தரவு விவரங்களின் மூலம் மதிப்பீட்டுத் தொகையினை ஒரே மாதிரியாக அனைத்து பொறியியல் கட்டுமானத் துறைகளிலும் மேற்கொள்ளும் வகையில், இக்குழு பலமுறை கூடி விரிவான விவாதங்களுக்குப் பிறகு, தொகுதி - 1 பொதுப்பணித்துறை, தொகுதி2 பொதுப்பணித் துறை மற்றும் இந்து சமய மற்றும் அறநிலையத்துறை, தொகுதி3 நெடுஞ்சாலைத்துறை மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தொகுதி 4, 5, 6, 7 & 8 சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீர் வாரியம் ஆகிய 8 தொகுதிகள் கொண்ட கட்டுமானப் பணிகளுக்கான தரவு விவரப் புத்தகங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. இது கட்டுமானப் பொறியியல் துறைகள் அனைத்தும், எளிதான முறையில் மதிப்பீடு தயாரிக்க பெரிதும் பயன்படும்.*

*பொதுப்பணித்துறைக்கான கட்டுமானப் பணிக்களுக்கான இப்புதிய தரவு விவரப் புத்தகங்கள், 40 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது கட்டுமானத் துறையில் ஏற்பட்டுள்ள பல்வேறு மாற்றங்கள் மற்றும் வளர்ச்சியை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இத்தரவு விவரப் புத்தகங்களின் வாயிலாக அனைத்துவிதமான கட்டுமானப் பணிகளுக்கு தேவையான கட்டுமான பொருட்கள், வேலையாட்கள், இயந்திரங்கள் போன்றவற்றின் விரிவான விவரங்களை அறிந்து கொள்ள இயலும்.*

*இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுப்பணித்துறை செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை செயலாளர் மரு. ஆர்.செல்வராஜ், பொதுப்பணித்துறை முதன்மை தலைமைப் பொறியாளர் மணிவண்ணன், தலைமைப் பொறியாளர் (சென்னை மண்டலம்) மணிகண்டன், நெடுஞ்சாலைத் துறை முதன்மை இயக்குநர் ஆர்.செல்வதுரை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*

---

## பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு:

# தேர்வு முறைகேடுகளைத் தடுக்க பறக்கும் படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!



*சென்னை, மார்ச் 28-*

*பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வினை 12,487 பள்ளிகளைச் சார்ந்த மாணவர்கள் 4,46,471 மற்றும் மாணவிகள் 4,40,499 என மொத்தம் 8,86,970 தேர்வர்களும், தனித் தேர்வர்கள் 25,841 மற்றும் சிறைவாசித் தேர்வர்கள் 273 என மொத்தம் 9,13,084 தேர்வர்கள் 4,113 தேர்வு மையங்களில் தேர்வெழுதவுள்ளனர்.*

*இத்தேர்வுப் பணியில் ஒவ்வொரு தேர்வு நாளன்றும் சுமார் 48,500க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் மற்றும் தேர்வு முறைகேடுகளை தடுக்க சுமார் 4,800க்கும் மேற்பட்ட பறக்கும் படையினர் தேர்வுப்பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள்.*

*பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வெழுதும் 15,729 மாற்றுத்திறனாளி தேர்வர்களுக்கு மொழிப்பாட விலக்கு, சொல்வதை எழுதுபவர், தேர்வெழுத கூடுதல் ஒரு மணி நேரம் போன்ற சலுகைகள் வழங்கப்பட்டுள்ளது என பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் தெரிவித்துள்ளார்.*

*இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*2024-25-ஆம் கல்வியாண்டிற்கான மார்ச்/ஏப்ரல் 2025 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு 28.03.2025 முதல் 15.04.2025 வரை நடைபெறவுள்ளது. இப்பொதுத்தேர்விற்கான செய்முறைத்தேர்வுகள் 22.02.2025 முதல் 28.02.2025 வரை நடைபெற்று முடிந்துள்ளது.*

*பொதுத்தேர்வுகளை கண்காணிப்பதற்காக கண்காணிப்பு அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மாவட்டத்திற்கு சென்று, தேர்விற்கு முந்தைய ஏற்பாடுகள் அனைத்தையும் பார்வையிட்டு உறுதி செய்துள்ளனர்.*

*மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்டத் தேர்வுக்குழு அமைக்கப்பட்டு ஒருங்கிணைப்புக் கூட்டம் நடத்தி அக்கூட்டத்தில், தடையில்லா மின்சாரம் வழங்கிட மின்சாரத்துறைக்கும், தேர்வுப்பணிகளுக்கு பாதுகாப்பு வழங்கிட காவல்துறைக்கும் தேர்வுமையங்களில் போதுமான அடிப்படை வசதிகள் செய்து தர உள்ளாட்சி அமைப்புகளுக்கும் முன்னேற்பாடுகள் குறித்து அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.*

*மாவட்டங்களில் தேர்வுப்பணிகளில் ஈடுபடும் அனைத்து நிலை அலுவலர்கள்/ ஆசிரியர்கள்/ பணியாளர்களுக்கு அறிவுரைக் கூட்டம் நடத்தப்பட்டு அறிவுரை கையேடுகளும் வழங்கப்பட்டுள்ளது.*

*பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வினை 12,487 பள்ளிகளைச் சார்ந்த மாணவர்கள் 4,46,471 மற்றும் மாணவிகள் 4,40,499 என மொத்தம் 8,86,970 தேர்வர்களும், தனித் தேர்வர்கள் 25,841 மற்றும் சிறைவாசித் தேர்வர்கள் 273 என மொத்தம் 9,13,084 தேர்வர்கள் 4,113 தேர்வு மையங்களில் தேர்வெழுதவுள்ளனர்.*

*இத்தேர்வுப் பணியில் ஒவ்வொரு தேர்வு நாளன்றும் சுமார் 48,500 க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் மற்றும் தேர்வு முறைகேடுகளை தடுக்க சுமார் 4,800க்கும் மேற்பட்ட பறக்கும் படையினர் தேர்வுப்பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள்.*

*பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வெழுதும் 15,729 மாற்றுத்திறனாளி தேர்வர்களுக்கு மொழிப்பாட விலக்கு, சொல்வதை எழுதுபவர், தேர்வெழுத கூடுதல் ஒரு மணி நேரம் போன்ற சலுகைகள் வழங்கப்பட்டுள்ளது.*

*9498383075 / 9498383076 ஆகிய தேர்வுக் கட்டுப்பாட்டு தொடர்பு எண்களை தொடர்பு கொண்டு மாணவர்கள்/தேர்வர்கள்/பொதுமக்கள் தங்களது புகார்கள், கருத்துக்கள் மற்றும் ஐயங்களை தெரிவித்து பயன்பெறலாம். இதற்கென அரசுத் தேர்வுகள் இயக்ககத்தில் முழுநேரத் தேர்வுக் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது. தேர்வு நாட்களில் ஒவ்வொரு நாளும் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை இக்கட்டுப்பாட்டு அறை செயல்படும்.*

**அலைபேசி தடை**

*தேர்வு மைய வளாகத்திற்குள் அலைபேசியை எடுத்து வருதல் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது. அத்துடன் தேர்வு பணியில் ஈடுபடும் ஆசிரியர்கள் தேர்வறையில் தங்களுடன் அலைபேசியை வைத்திருப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இவ்வறிவுரையை மீறி தேர்வர்களோ அல்லது ஆசிரியர்களோ அலைபேசி/இதர தகவல் தொடர்பு சாதனங்களை வைத்திருப்பதாக கண்டறியப்பட்டால் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**ஒழுங்கீனச் செயல்பாடுகள்**

*தேர்வு நேரங்களில் தேர்வர்கள் ஒழுங்கீனச் செயல்களில் ஈடுபட்டால் குற்றங்களுக்கு தக்கவாறு தண்டனைகள் வழங்கப்படும். மேலும் ஒழுங்கீனச் செயல்களுக்கு உடந்தையாகவோ / ஊக்கப்படுத்தவோ பள்ளி நிர்வாகம் முயலுமேயானால் பள்ளித் தேர்வு மையத்தினை இரத்து செய்தும், பள்ளி அங்கீகாரத்தினை இரத்து செய்தும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.*

*இவ்வாறு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் தெரிவித்தார்.*

---

# அன்று கேட்ட அதே குரல், இன்றும் கேட்கிறது !



திராவிட நாயகர், திராவிட மாடல் ஆட்சியின் முதல்வர், மு.க.ஸ்டாலின் அவர்கள் மார்ச் 22 அன்று, நாடாளுமன்றத் தொகுதி மறு சீரமைப்பு தொடர்பான கூட்டு நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் ஆற்றிய கருத்தியல் ரீதியான தொடக்க உரையும், அடுத்து மார்ச் 25 அன்று சட்டப் பேரவையில், இருமொழிக் கொள்கை சம்பந்தமான சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது நடந்த விவாதத்தில் பதிலளித்து ஆற்றிய திட்டவட்டமான தெளிவுரையும், மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை.

ஒன்றிய அரசு, சூழ்ச்சிச் சிந்தையோடு வலிந்து திணிக்க முயற்சிக்கும் நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பினால் பாதிக்கப்படும் மாநிலங்களுக்கு, “மாநில உரிமைகளைப் பறிக்கும் ஒன்றிய பா.ஜ.க.விடமிருந்து, இந்திய ஜனநாயகத்தைப் பாதுகாக்க, கூட்டாட்சித் தத்துவத்தை வலுப்படுத்த, உரிமைகளை மீட்டெடுக்க நாம் ஒற்றுமை உணர்வுடன் ஒன்றிணைந்து போராடுவோம் " என்று மார்ச் 22 அன்று அழைப்பு விடுத்தார் தமிழ்நாடு முதல்வர்.

**"நமது நாட்டிலுள்ள ஒவ்வொரு மாநிலமும், ஒவ்வொரு வகையில் தனித்தன்மை கொண்டது! பல்வேறு மொழிகள் - இனங்கள் - வழிபாட்டு நம்பிக்கைகள் - பண்பாடுகள் - உடைகள் - உணவுகள் - பழக்க வழக்கங்கள் கொண்டதுதான், இந்தியா! இத்தகைய மாநிலங்கள் சுயாட்சித் தன்மையுடன் செயல்பட்டால் தான் - இந்தியாவில் உண்மையான கூட்டாட்சி உருவாக முடியும்! " என்று இந்தியாவின் பன்முகத் தன்மையினையும், மாநில சுயாட்சியின் அவசியத்தையும் தமது உரையில் அடிக்கோடிட்டுக் காட்டி, "மாநில சுயாட்சி உரிமையை நிலைநாட்டிட, தொடர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய" தேவையையும் வலியுறுத்தினார் நமது முதல்வர்.**

மார்ச் 25 அன்று சட்டப் பேரவையில், " மாநில சுயாட்சியை உறுதி செய்து, மாநில உரிமைகளை நிலைநாட்டினால்தான் தமிழ் மொழியையும் காக்க முடியும், தமிழினத்தையும் உயர்த்த முடியும்" என்று உறுதிபடத் தெரிவித்தார் முதல்வர்.

இந்திய ஜனநாயக மேம்பாடு, கூட்டாட்சி உறுதிப்பாடு, மொழிப் பாதுகாப்பு - இன உயர்வு, வளர்ச்சி என இவை அனைத்தும் "மாநில சுயாட்சி" என்ற மாண்புறு தத்துவத்தை மையமாகக் கொண்டே ஆக்கபூர்வமாக இயங்கிட முடியும்; மாநில சுயாட்சி மலர்ந்தால்தான், மக்களாட்சியின் மகத்துவமும், நோக்கமும் முழுமையாக நிறைவேறும்.

திராவிட முன்னேற்றக் கழகம், இன்று நேற்றல்ல, எப்போது “திராவிட நாடு” கோரிக்கையைக் கைவிட்டதோ, அன்றிலிருந்தே கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக, சட்ட மன்றத்திலும், வெட்ட வெளியிலும், கன்னியாகுமரி முதல் காஷ்மீரம்வரை, வாய்க்கும் முனைகளிலெல்லாம்,தொடர்ந்து மாநில சுயாட்சி முழக்கத்தை எழுப்பிக்கொண்டிருக்கிறது. அவ்வப்போது புழுதிவாரித் தூற்றுவோர் கிளம்பினாலும், அதுபற்றிக் கிஞ்சிற்றும் கவலை கொள்ளாமல், போற்றுவோர் போற்றட்டும் என்று, " மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி " எனும் இலட்சியப் பதாகையை உயர்த்திப் பிடித்த வண்ணம் ஊக்கத்துடன் நடைபோடுகிறது திராவிடச் செம்படை!

**சட்டப் பேரவையிலேயே, முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் 27.6.1967 அன்று, நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதத்தில் பேசும்போது, " நான் திராவிட நாடு கோரிக்கையை விட்டுவிட்டேன்.ஆனால் திராவிட நாடு கேட்பதற்கு என்னென்ன காரணங்கள் இருந்தனவோ, அவற்றில் ஒன்றைக்கூட விட்டுவிட வில்லை.மொழி பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக திராவிட நாடு கேட்டோம்; அதை விட்டுவிடவில்லை.மத்திய சர்க்காரிடம் அதிகாரங்கள் குவியலாக இருக்கக் கூடாது என்பதற்காகக் கேட்டோம்; அதை விட்டுவிடவில்லை.மாநில சர்க்கார் பல அதிகாரங்களை பல துறைகளிலும் பெற வேண்டும் என்பதற்காகக் கேட்டோம்; அதை நாங்கள் விட்டுவிடவில்லை. பண்பாடு காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காகக் கேட்டோம்; அதை நாங்கள் விட்டுவிடவில்லை. திராவிட நாட்டைத்தான் விட்டு விட்டீர்களே, ஏன் இந்தியை எதிர்க்கிறீர்கள் என்று கேட்டால் ஒத்துக்கொள்ள முடியுமா? இந்தி எதிர்ப்பை விட்டுவிட மாட்டோம். நமது அரசியல் சட்டத்தின் அடிப்படைப் பிரிவுகளிலேயே திருத்தங்கள் வேண்டும் என்பதற்காக வாதாடுகிறேன் " என்று எடுத்துரைத்த வைர வாக்கியங்கள் ஒளி பாய்ச்சிக் கொண்டே இருக்கின்றன.**

மாநிலங்களில் முழுமையான சுயாட்சியும், மத்தியில் கூட்டாட்சியும் அமைந்திட வேண்டுமெனக் கோருவது கழகத்தின் நோக்கங்களில் ஒன்றாக, அதன் சட்ட திட்டங்களில் இடம் பெற்றிருக்கிறது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் இறுதியாக தமது "ஹோம்ரூல்" ஏட்டில் 'தம்பிக்கு' எழுதிய கடிதத்திலும், " காகிதத்தில் கூட்டாட்சியாகவும்,நடைமுறையில் மத்தியில் அதிகாரக் குவிப்பு கொண்டதாகவும் இருக்கிற ஒரு அரசியல் சட்டம் " என்று குறிப்பிட்டதை அவர்தம் தம்பிமார்கள் மறந்திடக் கூடுமோ ? அந்தக் கடிதம் அன்றோ "அண்ணாவின் உயில் " எனப் போற்றப்படுகிறது!

**பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் பின் முத்தமிழறிஞர் கலைஞர் முதலமைச்சரானதும் 17.3.1969 அன்று டெல்லி சென்றார்.அப்போது செய்தியாளர்கள் கூட்டத்தில்," மாநில அரசுகளுக்கு மத்திய அரசு, அதிக அதிகாரம் கொடுக்க வேண்டும்.மாநில அரசுக்கும்,மத்திய அரசுக்கும் நல்லுறவு வளர அதிக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டியது அவசியம்.மத்திய அரசிடம் அதிகாரங்கள் குவிந்து கிடக்கின்றன.அவற்றை மாநில அரசுக்குப் பகிர்ந்து கொடுத்தால், மத்திய அரசின் சுமை குறையும்" என்று, அண்ணா அவர்களின் ஆழ்ந்த எண்ண ஓட்டத்தை அழகாகப் பிரதிபலித்தார்.**

முதலமைச்சர் கலைஞர், வாய்ப்பு நேர்ந்த போதெல்லாம் மத்திய - மாநில உறவுகள் குறித்துப் பேசினார்.1969 ஏப்ரல் 18 அன்று தேசிய வளர்ச்சிக்குழுக் கூட்டத்தில், மத்திய - மாநில உறவுகள் குறித்து ஆராய வேண்டிய காலம் வந்துவிட்டது என்றும்,அந்த முயற்சியின் முதல் கட்டமாக முதலமைச்சர்கள் கொண்ட குழு ஒன்று மத்திய - மாநில உறவுகள் பற்றி விவாதித்திட வேண்டும் என்றும் கருத்து அறிவித்தார்.

**மத்திய - மாநில உறவுகள் மற்றும் அதிகாரங்கள் குறித்து ஆராய்ந்து அறிக்கை தருவதற்காக 22.9.1969 அன்று நீதியரசர் ராஜமன்னார் தலைமையில் குழு ஒன்றையும் அமைத்து, 1971ல் அதன் விரிவான அறிக்கையினைப் பெற்று வெளியிட்டார் கலைஞர்.இந்தியாவிலேயே முதன்முதலாக ஒரு மாநில அரசு மத்திய மாநில உறவுகள் குறித்துப் பெற்ற அறிக்கை அதுவாகும்.**

1970 பிப்ரவரியில் நடந்த திருச்சி மாநாட்டில் கலைஞர் , 'மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி' என்பதை, கழகத்தின் இலட்சிய முழக்கங்களில் ஒன்றாக ஆக்கினார்.1974-ஆம் ஆண்டு ஏப்ரல் 20ல் சட்ட மன்றத்தில் மாநில சுயாட்சித் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றிடச் செய்தார் கலைஞர்.மாநில சுயாட்சிக்கான தீர்மானம், இந்தியாவிலேயே முதன் முதலாகச் சட்டப் பேரவையில் நிறைவேற்றி வைத்த தனிச்சிறப்பு கலைஞரின் ஆட்சிக்கே உரித்தானது.

**மாநில உரிமைகள் - மாநில சுயாட்சி எனும் கோட்பாடு பேரறிஞர் அண்ணா அவர்களின் சிந்தனையிலே கருவாகத் திரண்டது. முத்தமிழறிஞர் கலைஞர், அந்தக் கருவுக்குச் சட்ட அடிப்படையிலான உருவம் கொடுத்து உலவ விட்டார்.அண்ணா - கலைஞர் அன்று முன்னெடுத்த உரிமைக் குரலை, இன்று இந்தியா முழுவதும் எதிரொலிக்கச் செய்திருக்கிறார் திராவிட மாடல் ஆட்சியின் முதல்வர், திராவிடப் பெருந்தலைவர் மு.க.ஸ்டாலின்!**

** ** **

**கி.இராஜமாணிக்கம்**

** ** **